**A.Liston Rajanikanth**

**Career Guidance Counselor.**

**முயன்றால் நீங்களும் சாதனையாளர்கள்தான்:**

இன்றைய உலகில் மனித வாழ்க்கையானது மிகவும் இயந்திமயப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப மாற்றங்களால் இயங்கவைக்கப்படுகின்ற ஒன்றாக மாறியிருக்கின்றது. உலகமயமாக்கல் எம்மை உலகத்தின் கடைஎல்லையோடு இணைத்திருக்கின்றது. இவ்வாறான சூழலில் நாம் எமது தனித்துவ இருப்பை இழந்துவிடாமல் தக்கவைக்கவும், காலத்திற்கேற்றவகையில் எம்மை மாற்றிக்கொள்வதற்குப் பதிலாக மாற்றங்களை எமக்கேற்ற சாதனைக்கான சாத்தியப்பாடுகளாக்கி வாழ்க்கையை வென்றெடுக்க வேண்டும். அதற்கு எப்போதும் எமக்கு ஆணிவேராக இருப்பது கல்வி. கல்வி என்றதும் எல்லோர் மனங்களிலும் ஆள வேரூன்றி இருப்பது க.பொ.த. உயர்தரப் பரீட்சை காரணம் பல்கலைக்கழகம் செல்வதற்கு இப்பரீட்சையில் உச்ச அளவில் சித்தியடைய வேண்டும். எம்மைப் பொறுத்தவரை ஒருவரது கல்வி வாழ்க்கையின் வெற்றி என்பது பல்கலைக்கழகம் ஒன்றிற்கு தெரிவு செய்யப்படுவது மட்டும்தான் என்றாவாறாக அமைந்திருக்கின்றது. இது முற்றிலும் தவறானது.

ஒரு மாணவன் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப்பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படுவதென்பது மிகவும் வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும். இருந்தபோதிலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையானது மிகவும் குறைந்தளவனதாக காணப்படுகின்றது. இவ்வாறான சூழலில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுபடாதவர்களின் நிலையினைப் பார்க்கின்றபோது அவர்கள் தோற்றவர்களாகவோ, வாய்ப்புக்களைத் தவற விட்டவர்களாகவோ அல்லது எதற்கும் பொருதத்தமற்றவர்கள் என்றோ அர்த்தமில்லை. உண்மையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் இலவசமாக தமது பட்டத்தினைப் பெறுவதற்கான கல்வியினைத் தொடர்வதற்கான வர்ய்ப்பினைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதே உண்மை. எனவே இதனைத் தவறவிட்ட மாணவர்களின் அடுத்த தெரிவென்பது மிகவும் பிரகாசமானதாகவே இருக்கின்றது.

இலங்கையில் பல்கலைக்கழகத்திற்கு நிகராகவும் இலகுவாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவகையிலும் நூற்றுக்கணக்கான கற்கைநெறிகள் அரச நிறுவனங்களினால் கற்பிக்கப்பட்டுவருவதோடு இக்கற்கைநெறிகளை குறைந்த செலவில் கற்கக்கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் பல்கலைக்கழகத்திற்கு நிகரான பட்டங்கள், தேசிய தொழிற்தகமைச் சான்றதழ்கள் என்பனவும் வழங்கப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக

1. UNIVOTEC -
2. College of Education
3. College of Technology

4. University College
5. VTA
6. NAITA
7. NYSC
8. High Tech

போன்றவற்றோடு ஏராளமான அரச தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் காணப்படுகின்ற அதேவேளை இவற்றிற்கு மேலதிகமாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் என்று கணிசமானளவு நிறுவனங்கள் காணப்படுகின்றன.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையே என்று ஏங்குவதற்குப் பதிலாக உங்களுக்கு மிகப் பொருத்தமாக காணப்படுகின்ற, உங்களது ஆளுமைத் திறனிற்கு ஏற்ப உச்சளவில் கொண்டுசேர்ப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குவதற்கான உளவியற் சோதனைகள் ( Psychometric Test ) இப்போது தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களால் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. பலவீனங்களை பலப்படுத்துவதற்குப் பதிலாக உங்கள் பலங்களை மேலும் பலப்படுத்தி வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டப்படுகின்றது.

எமது நாட்டில் ஒருவரது கல்வித் தரத்தினை அளவிடப் பயன்படும் 2 வழிமுறைகள்.

- இலங்கை தகுதிக் கட்டமைப்பு - Sri Lanka Qualification Frame work – SLQL
- தேசிய தொழிச் தகமை - National Vocational Qualification – NVQ

SLQL அமைப்பானது வழமையான பின்வரும் தரங்களின் அடிப்படையில் அமைந்திருக்கும்.




NVQ என்பது பின்வரும் அடிப்படையில் அமைந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| **SLQL 10** | Doctoral Degree, MD with Board Certification | |
| **SLQL 9** | Master of Philosophy, Masters by fulltime research, DM | |
| **SLQL 8** | Masters with course work and a Research component | |
| **SLQL 7** | Postgraduate Certificate, Postgraduate Diploma, Masters with coursework | |
| **SLQL 6** | Honours Bachelors | |
| **SLQL 5** | Bachelors Degree, Bachelors Double Major Degree | **NVQL 7** |
| **SLQL 4** | Higher Diploma | **NVQL 6** |
| **SLQL 3** | Diploma | **NVQL 5** |
| **SLQL 2** | Advanced Certificate | **NVQL 4** |
| **SLQL 1** | Certificate | **NVQL 3** |
| | | **NVQL 2** |

இங்கு தேசிய தொழிற்தகமை ( NVQL ) கட்டமைப்பானது NVQ III = G.C.E.O/L என்றவாறும் NVQ IV ஆனது G.C.E.A/L என்ற அடிப்படையிலும் அமைந்திருக்கும். எனவே G.C.E.O/L அல்லது G.C.E.A/L பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் மாணவர்கள் இவ் NVQL கட்டமைப்பிற்கூடாக தங்களுக்கே உரித்தான பிரத்தியேகத் துறையில் பட்டத்தினை பெறுவதற்கான வாய்ப்பு மிகவும் பிரகாசமாக காணப்படுவதோடு தங்கள் தொழில் வாழ்க்கையில் உச்சநிலையினை எட்டுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. மேலும் இவ் தேசிய தொழிற் தகமையினை இரண்டு வழிகளில் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

NVQL ஏற்கனவே செய்துகொண்டிருக்கின்ற தொழில் அனுபவத்தினை அடிப்படையாகக்கொண்டும் RPL (Recognition of Prior Learning) இற்கூடாக வழங்கப்படுகின்றது. இத்தொழிற் தகமைச் சான்றிதழ்கள் உள்நாடு, வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொழில் தேடுவோருக்கு மிகவும் பயனுள்ளதாக காணப்படுகிறது.

இவற்றிற்கு மேலதிகமாக அண்மையில் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட 13+ என்பதும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களும் உயர்தரத்தில் தொழிற் கல்வியை கற்பதற்கான வாய்ப்பினை வழங்கியிருக்கின்றது. இங்கு மேற்படி கற்கையினை தொடரும் மாணவர்கள் அவர்களுக்குப் பொருத்தமான தொழிற் துறையினை தெரிவுசெய்து கற்பதனூடாக அப் பிரத்தியேக துறையில் பட்டம் ஒன்றினை NVQ கட்டமைப்பிற்கூடாக பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இங்கு முக்கிய விடயம் என்னவென்றால் ஒரு மாணவன்/மாணவி தான் விரும்புகின்ற இலக்கினை அடைவதற்கு தடைகள் எதுவும் இல்லையென்பதோடு சாதிக்கவேண்டும் என்ற இலட்சிய விருப்பு கொண்டவர்களுக்கு வாய்ப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதாகும்.

ஆகமொத்தத்தில் எந்தவொரு மாணவனும் தனது விருப்பத்திற்கும் தனது விசேட ஆளுமைத் திறனுக்கிமிடையில் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தி பொருத்தமான வேளையில் துல்லியமாக இலக்கினை வரித்து முழுஈடுபாட்டோடு செயலாற்றும்போது வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்தினை அடைய முடியும். இதனை முன்னிறுத்தியதாகவும் அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதாகவும் தொழில் வழிகாட்டல் காணப்படுகின்றது. இத் தொழில் வழிகாட்டல் என்பது வெறுமனே தொழிலுக்கு வழிகாட்டுதல் அல்ல மாறாக குறிப்பிட்ட ஒருவரது விசேட ஆளுமை, திறன்கள் மற்றும் ஆர்வத்தினை அறிந்து அவற்றை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக அவரை மிகப் பொருத்தமான துறையில் வழிப்படுத்தி அத்துறையில் அவர் உச்சநிலையினை அடையும்வரை அவருக்கான வழிகாட்டுதலை தொடர்ச்சியாக வழங்கும் செய்பாடாக இருக்கின்னறது.